Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (14-10-65) இதழ் 244

விசுவாவசு புரட்டாதி 28 ஜ: ஆகிர் பிறை 18 வியாழக்கிழமை

முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீல சோப் தற்பொழுது புதிய ரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டு பெரிய சைஸ் கட்டியாக தயாரிக்கப்படுகின்றது.

20 சதத்திற்கு எங்கும் கிடைக்கும்.

கூடிய உடுப்புகளை சலவை செய்யலாம்.

இ. போ. ச.

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, புதன்

ஒழுங்காகபஸ்களைச் செலுத்தாத இலங்கை போக்குவரத்து சபையைச் சேர்ந்த பஸ் சாரதிகள்மீதுநடவடிக்கைஎடுக்கப்படவிருக்கிறது. 1964-ம் ஆண்டு 3928 பஸ் விபத்துக்கள் நடந்திருக்கின்றன. இவற்றுள் 2813 சிறு விபத்துக்களும், 514 பெரும் விபத்துக்களும், 523 அபாயகரமான விபத்துக்களும், 78 மரண விபத்துக்களும் அடங்கியுள்ளன.

# 25,000 ஏக்கர் நிலத்தில் உப உணவு உற்பத்தி

## யாழ்ப்பாணம், பொலநறுவையில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்படும்

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம், கல்ஓயா, பொலநறுவை ஆகிய இடங்களில் மேட்டுநில குடியேற்றத்திட்டங்களில் உபஉணவுப்பொருள்களைப் பயிரிட்டு நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகைசெய்யுமுகமாக இப்பகுதிகளில் போதிய நீர்ப்பாசனவசதிகள் அளிப்பதற்கு குழாய்க்கிணறுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

காணிமந்திரியின் திட்டத்தின்படியே இவ்வித கிணறுகள் அமைக்கப்படவிருக்கின்றன. அமைக்கப்படவிருக்கும் இக் கிணறுகள் 25 ஆயிரம் ஏக்கர் மேட்டு நிலத்தை அபிவிருத்திசெய்யப்பயன்படுத்தப்படும்.

இக்கிணறுகளிலிருந்து பாய்ச்சப்படும் நீரைத் தேக்கிவைப்பதற்கு குளங்களும் கட்டப்படவிருக்கின்றன.

இவ்வித குழாய்க்கிணறுகளைத் தோண்டுவதற்கு வெளிநாட்டுஉதவி பெறப்படவிருக்கிறது.

அரசாங்க தோட்டக் கார்ப்பரேஷன் இவ்வித குழாய்க்கிணறுகளை ஏற்கனவே உபயோகப்படுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## மானநஷ்ட வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், வியாழன்

இளவாலையைச் சேர்ந்த திரு. சி. எஸ். நாயகம் 25,000 ரூபா மானநஷ்டம் கோரி தாக்கள் செய்த வழக்கு அப்பீலில் உயர்நீதி மன்றத்திற்கு விசாரணைக்காக வந்தபொழுது நீதியரசர் ஜே. சிறிமானே அப்பீல் மனுவைத் தள்ளுபடி செய்தார்.

இவ்வழக்கில் சி. பி.செல்வராசா, ரி. விஜயரத்தினம், பி. நவரத்தினம், த. ஞானக்தாக்கம் ஆகியோர் அதே ஊரைச்சேர்ந்த சி. எஸ்- நாயகத்தை அவமானப்படுத்தும் நோக்கமாக சுவர்களிலும், ரோட்டுகளிலும் தூஷித்து எழுதியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

பிரதிவாதிகள் சார்பில் வழக்கறிஞர் சி. ரங்கநாதன் கியூ. சி., வழக்கறிஞர் ஈ. பி. விநாசித்தம்பியின் உதவியுடன் ஆஜரானுர்.

வாதிகள் சார்பில் வழக்கறிஞர் எச். டபிள்யூ.ஜெயவர்த்தன கியூ. சி. வழக்கறிஞர் ஈ. பி. சத்துருகுலசிங்கத்தின் உதவியுடன் ஆஜரானுர்.

## உள்ளூராட்சி தலைவர்களுக்கு கூடுதல் அதிகாரம்

### மந்திரி முகம்மது அறிவிப்பு

மன்னார், புதன்

உள்ளூராட்சிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம் உள்ளூராட்சித் தலைவர்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்க அரசாங்கம் உத்தேசித்திருப்பதாய் மன்னார் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும் தொழில் மந்திரி திரு. முகம்மது கூறினார்.

மன்னார் பகுதியில் சூறுவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான உதவிவழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாயும், கட்டிடங்களைச் சீர்படுத்துவதற்குத் தேவையான உதவியளிக்கத் தீர்மானித்திருப்பதாயும் அவர் மேலும் கூறினார்.

'மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். குறுகிய காலத்திற்குள் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது. சகலரும் பிரதமர் மீது வைக்கும் நம்பிக்கை வீண்போகாது' என்றும் அவர் கூறினார். மன்னார் பட்டினசபை இன்று மந்திரிக்கு ஒரு வரவேற்பு அளித்தது.

## இளவாலை கொலைமுயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், வியா.

இளவாலை கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. முன்னிலையில் மூன்ருவது தினமாக தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மேமாதம் 5-ந் திகதி இளவாலையில் ரி. விஜயரத்தினம் என்பவரை, துரைரத்தினம் என்பவர் கொலை செய்யமுயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வக்கேட் திரு. ரி. கணேசலிங்கம், திருவாளர்கள் ஆர். ஜே. செல்வரத்தினம், தளையசிங்கம் யோகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

மேல்விசாரணை இன்று காலை 9.15 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

## யாழ்ப்பாணத்தில் மரைன் யந்திரத் தொழிற்சாலை அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா

சூறுவளியினால் பழுதடைந்த யந்திரப் படகுகளை திருத்துவதற்கு யாழ்ப்பாணத்தில் மரைன் யந்திர தொழிற்சாலை ஒன்றைஆரம்பிக்க வேண்டுமென்று இம்மாதம் 30-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் கடற்றொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவை மரைன் யந்திர பயிற்சியாளர் கழகம் கேட்டுக்கொள்ளும்.

நீர்கொழும்பு கடற்றொழில்பகுதி பயிற்சி நிலையத்தில் 64-65 ஆண்டில் மரைன் யந்திர பொறியியல் பிரிவில் பயிற்சிபெற்று வெளியேறிய வட பகுதி இளைஞர்களைக் கொண்ட இக்கழகம் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் கடல்தொழில் மந்திரியைப் பேட்டி காணுவார்கள்.

கீழ்க்காணும் விஷயங்களையும் வற்புறுத்துவார்கள்: பயிற்சிபெற்று வெளியேறியவர்களுக்கு மீன்பிடிக் கூட்டுஸ்தாபனங்களில் பொறியியல் பிரிவில் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்.

அடுத்த வருடம் ஆரம்பமாகும் பயிற்சிக்கு பயிற்சியாளர்களை இருபதாக அதிகரிக்க வேண்டும்.

இத்தூதுக்குழுவில் பயிற்சியாளர் கழகத் தலைவர் திரு. ஆர். ஜே. தம்பையா, காரியதரிசி திரு. நா. விக்கிரமசிங்கம் ஆகியோர் செல்வார்கள்.

## சிவானந்தரின் உருவச்சிலை இன்று வருகிறது

யாழ்ப்பாணம், வியா.

திவ்விய ஜீவனசங்க ஸ்தாபகர் ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் உருவச்சிலை ஒன்றினை ரிஷிகேசத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரும் ஸ்ரீ ஓங்காரானந்த சரஸ்வதி இன்று பலாலி விமான நிலையத்தில் வந்திறங்குவார்.

இன்று பிற்பகல் 2 மணியளவில் சிவானந்தஜீயின் திருவுருவச்சிலையும் பிறபுனிதச் சின்னங்களும் சுன்னுகம் கதிரைமலைச் சிவன்கோவில் மண்டபத்தில் பக்தர்கள்தரிசனத்துக்கு வைக்கப்படும். விசேஷ பூசை வழிபாடும் நடைபெறவிருக்கிறது.

## ரூபர்ட் 20-ம்திகதி பீக்கிங் செல்வார்

பம்பலப்பிட்டி, புதன்

சீனுவின் இலங்கை ஸ்தாணிகராக நியமனம் பெற்ற திரு. ரூபர்ட் குணவர்தன இம்மாதம் 20-ம் திகதி தமது பதவியைப் பொறுப்பேற்பதற்காக இங்கிருந்து பீக்கிங்குக்கு புறப்படுவார் எனத் தெரியவருகிறத.

அவருடன் அவரது பாரியாரும் இரு [illegible] செல்வார்கள்.

## வானெலி கமிஷன் இங்கு வரும்

நல்லூர், வியா.

இலங்கை வானெலி விசாரணைக் கமிஷன் மிக விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது. திரு. ஏச். ஏ. ஜே ஹுலுகல தலைமையில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் இந்த விசாரணைக் கமிஷன் முன் வலி - வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜத்தூது கோஷ்டியினர் சாட்சியமளிக்க அறிவித்தல் கொடுத்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் வானெலி நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென இத்தூது கோஷ்டி வற்புறுத்தும். யாழ்ப்பாணத்தில் உள்ள [illegible] முன் சாட்சியமளிக்கவிருக்கின்றன.

## இவ்வார இறுதியில் தினேஷ்சிங் வருவார்

பம்பலப்பிட்டி, புதன்

இந்திய வெளியுறவு உதவி மந்திரி திரு. தினேஷ்சிங் இவ்வார இறுதியில் இலங்கை வருவார் என அறியப்படுகிறது.

நேற்று இலங்கை வரவிருந்த திரு. தினேஷ்சிங் இறுதி நேரத்தில் தமது விஜயத்தை ரத்துச்செய்திருந்தார்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்று கொழும்பில் இல்லாதிருந்ததாலேயே திரு. தினேஷ்சிங்கின் விஜயம் திடீரென ரத்துச்செய்யப்பட்டதென அவதானிகள் கருதுகின்றனர். திரு. டட்லி தற்போது அனுராதபுரத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

## மந்திரி திருச்செல்வத்துக்கு சுகவீனம்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ள ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. திருச்செல்வம் சுகவீனமுற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் தமது கற்றுப்பயணத்தை ரத்துச்செய்துள்ளார். மந்திரிக்கு டிங்கு ஜுரம் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

காரைதீவில் மந்திரியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த மக்கள் அவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டதனுல் ஏமாற்றமடைந்தனர். காரைதீவில் மந்திரியை வரவேற்க பெரியபந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன.

## குமரிமுனையில் தலாய்லாமா

திருவனந்தபுரம், அக். 13

இங்கு விஜயம் செய்திருக்கும் தலாய்லாமா, கன்னியாகுமரி ஆலயம், காந்திஜி நினைவு மண்டபம்' விவேகானந்தர் பாறை ஆகியவற்றுக்கு சென்றார்.

## நல்லவர்நாடு

அடிஸ்பாபா, அக். 13

'நல்லவரால் ஆளப்படும் நாடு' என எதியோப்பியா பற்றியும் அதன் சக்கரவர்த்தி பற்றியும் வருணித்த டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பிறருக்கு நாம் சேவை செய்வானேன்? எல்லாரும் ஒரே வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்வதால் தான், எல்லா உயிர்களிலும் தானே இருப்பதாகக் கூறுகிறார் கண்ணபெருமான். அதனால் பிறருக்குப் பணிசெய்தால் எமக்கு நாமே சேவைசெய்துகொண்டவர்களாவோம். மேலும் மகிழ்ச்சியாக உற்சாகமாக நாம் பணிசெய்வதால் நமது ஆணவ உணர்ச்சியும் மெதுவாகக் குறைகிறது.

—சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 3[illegible]

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 28 உ (14-10-65)


## உத்தியோக மாப்பிள்ளை

"உத்தியோகத்தரை மட்டும் மணக்க வேண்டும் என்ற ஆசைக் கனவுகளை விட்டு விவசாயம், கைத்தொழில்களில் ஈடுபடும் வாலிபர்களைமணம் புரிய பெண்கள் முன்வர வேண்டும்'' என்று நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா மகாஜனக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்மன்ற விருந்துபசாரத்தில் பேசுகையில் யோசனை தெரிவித்தார். இந்த நல்ல யோசனையைப்பற்றி நம் பெண்கள் யோசித்துப் பின்பற்றினுல் சமுதாயம் வெகுவாக முன்னேறவழி பிறக்கும்.

உத்தியோக மோகம் தான் நம்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்னையாக இருப்பதற்கும் சமூகத்தில் இதர பல பிரச்னைகள் தோன்றுவதற்கும் காரணமாக இருக்கிறது. சீதனக் கொடுமை இங்கு நிலைபெற்றுள்ளதற்கும் கூட உத்தியோகமோகம் தான் காரணம். டாக்டர் தொழில் புரிபவருக்கு லட்சம் ருபாயும் என்ஜினியருக்கு மற்றொரு தொகையும் அரசாங்க குமாஸ்தாவுக்கென ஒரு தொகையுமாக சீதனம் வகுக்கப்பட்டுள்ளது. பெண்களும் தாம் ஒரு டாக்டரையோ, என்ஜினியரையோ அல்லது அரசாங்க உத்தியோகத்தரையோ மணக்க வேண்டுமென்றே விரும்புவதால் பணமில்லாத காரணத்தால் மணமில்லாமலே வாழ்நாளைக் கழிக்கவும் நேரிடுகிறது.

இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. அரசாங்க உத்தியோகம் கிடைப்பது சுலபமல்ல. டாக்டர் படிப்பும் பெற்றவர்களுக்கும்கூட இன்று அரசாங்கத்தில் வேலை கிடைப்பது கஷ்டமாகவுள்ளது. முன்னாளில் விவசாயம், கைத்தொழிலில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அடிமை வாழ்க்கை வாழாமல் சுதந்திரமாக வாழ்ந்தனர். அதனால் அவர்கள் சமுதாயத்துக்குச் சேவையும் செய்தனர். பெண்களும் என்னதான்வறுமை வந்தபோதிலும் ஆண்களுடன் ஒத்துழைத்து சமூக முன்னேற்றத்துக்கு உழைத்தனர். மீண்டும் நமது இளம் பெண்கள் சுதந்திரமாகத் தொழில் செய்து வாழும் இளைஞர்களையும், உழுதுண்டு வாழும் வாலிபர்களையும் மணக்க முன்வந்தால் நமது வாலிபர்கள் மத்தியில் உத்தியோக மோகம் நீங்கி வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னை குறைந்து சமுதாயமும் நாடும் முன்னேறும்.

மற்றொரு வைபவத்தில் நீதியரசர் தம்பையா பேசுகையில், யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தமிழ்ஆசிரியர்கள் வெளியூர் சென்று கல்வி போதிக்கவேண்டுமென்றும் அவர்கள் அவ்விதம் செல்லத் தயங்குவதால் தென்னிலங்கையில்உள்ள பாடசாலைகளில் தமிழ் வகுப்புக்கள் மூடப்படுகின்றனவென்றும் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்ஆசிரியர்கள் இல்லாததால் தான் தமிழ் வகுப்புக்கள் அங்கு மூடப்படுகின்றனவெனக் கருத முடியாது. ஏனெனில் தமிழ்படித்து, ஆசிரியர் பயிற்சியும்பெற்றவர்கள் பலர் வேலையில்லாதிருக்கின்றனர் என்பது நாடறிந்த உண்மை எனினும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே வாழ்நாள் முழுவதும் இருக்கவேண்டுமென சில ஆசிரியர்கள் விரும்புவது சமுதாயத்துக்கும் தமிழ்மொழிக்கும் நன்மைசெய்வதாகாது. ஆசிரியர்கள் மட்டுமல்ல படித்த இளைஞர்களும்மற்றையோரும் நாட்டின் எப்பகுதிக்கும் சென்று தொழில்புரிய முன்வரவேண்டும். திரைகடலோடியும் திரவியம் தேடியவர்களின் பரம்பரையில் வந்தவர்களென்பதை நாம் மறந்துவிடலாமா.

## "நூற்றுக்கு மேற்பட்ட நெசவுநிலையங்கள் நிறுவப்படும்"

—மந்திரிதஹா

காலி, புதன்

"நாட்டிலுள்ள பல பாகங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட நெசவு நிலையங்களைத் தொடக்கி, 250,000க்கு மேற்பட்ட வேலையில்லாத இளைஞர்களுக்கும் பெண்மணிகளுக்கும் வேலைகொடுப்பதெனமந்திரிசபை முடிவு செய்திருக்கிறது'' என்று உள்நாட்டமைச்சர் டாக்டர் டடள்யூ தஹநாயக்கா தெரிவித்தார்.

காலி வித்யோதய வித்தியாலங்கார வருடாந்த பரிசளிப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் திரு. தஹநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தீராத பல முக்கிய பிரச்னைகளில் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒன்றென்றும், தேசியஅரசாங்கம் எப்படியாவது இப் பிரச்னையைத் தீர்த்துவைக்குமென்றும் அவர் உறுதி கூறினுர். "மாணவர்கள் படிக்கும் பாடங்களுடன் விவசாயத்தையும் ஒன்ருகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும், வயல்களில் சென்று அவர்கள் வேலைசெய்யவேண்டுமென்றும் பிரதமமந்திரி விடுத்த வேண்டுகோளை மாணவர்கள் ஏற்று நடக்கவேண்டும்'' என்றும் திரு. தஹாகூறினுர்.

மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

# விளம்பரமில்லாததே சிறப்பு அறியாமைக்கு காரணம்

## காலஞ்சென்ற கவிஞரின் நூல் அறிமுக விழாவில் பேச்சு

வெள்ளவத்தை, புதன்

"தமிழ்நாட்டுக் கவிதைகளிலும் சில தன்மைகளில் ஈழநாட்டுக் கவிதைகள்சிறப்பாக மிளிர்வதை மக்கள் அறியாததற்குக் காரணம் அவற்றிற்கான போதிய விளம்பரக் குறைவாகும்'' என்றுகாலஞ்சென்ற 'யாழ்ப்பாணக் கவிராயர்' பசுபதியின் கவிதைத் தொகுப்பாகிய "புது உலகம்'' நூலின் அறிமுக விழாவின்போது திரு. கணேசலிங்கன் குறிப்பிட்டார்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற அறிமுக விழாவிற்குக் கவிஞர் முருகையன் தலைமை வகித்தார். 'ஈழத்துச்சோமு' வரவேற்புரை வழங்குகையில், அரசியல் மற்றும் தொழிற்சங்க வேறுபாடுகளைக் களைந்து பரந்த அடிப்படையில் எழுத்தாளர்கள் முற்போக்கு இலக்கியத்திற்காக உழைக்க ஒற்றுமைப்படவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

இதன்பின் மறைந்த கவிஞரின் நினைவு குறித்து இரு நிமிடங்கள் மௌனம்அனுட்டிக்கப்பட்டது.

நூலின் அறிமுக உரையை அ. ந. கந்தசாமி ஆற்றுகையில், "இறக்கும்வரை உயர் கருத்திற்காக முற்போக்கு இலக்கியத்திற்காக வாழ்ந்து ஏழ்மை, செல்வம் என்ற பேதமற்ற புதுஉலகு நிறுவவேண்டுமென்று கனவு கண்டவரே கவிஞர் பசுபதி'' எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்று கூறும்போது அங்கு தேசிய இலக்கியமென்ற கருத்தையே காணுகின்றோம். இலக்கியம் பொழுதுபோக்குக்காக என்பது தமிழ் மரபுக்குமாறுபட்டது எந்தக் கவிதையும் பயனைக் கொடுக்கவேண்டும் வள்ளுவனும் வாழ்க்கை இவ்வாறு அமையவேண்டுமென்றே எடுத்துக் காட்டினுர்.

அரசாங்க அரசகருமமொழித் திணைக்கள அதிகாரி திரு. கே. லக்ஷ்மணன் பேசுகையில், "தென்னையையும் மீசையையும் பற்றிப்பாடும் போதெல்லாம் தமிழை மறவாத தமிழ்ப்பற்று நிறைந்தவரே கவிஞர் பசுபதி'' என்று குறிப்பிட்டார்.

நாவலாசிரியர் இளங்கீரன் பேசுகையில், முற்போக்கு இலக்கியங்களில் குறைபாடு இல்லையென்று கூறவில்லை. முற்போக்கென்பது சோஷலிசத்தையும், சோஷலிசத்தின் அங்கமாகிய தேசியத்தையும் குறிக்கும் எனத் தெரிவித்தார்.

## மகாசங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

கோண்டாவில் அற்புத நர்த்தனவிஞயகர் மகா சங்காபிஷேகம் எதிர்வரும் 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆரம்பமாகி நண்பகல்வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை மாலையில் விசேஷட நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## தீர்த்தோற்சவம்

மட்டக்களப்பு, புதன்

சரித்திரப்புகழ் பெற்ற ஆரையம்பதி கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்தமுதலாம் திகதி ஆரம்பமாகியுள்ளது. ஆலயத்தின் தீர்த்தோற்சவம் [illegible] ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு ஆலயக் [illegible] நடைபெற்றது.

## 'சிறுகதை இலக்கிய வளர்ச்சி குறைவுதான்'

யாழ்ப்பாணம், வியா.

'சிறுகதை இலக்கியம் ஈழத்தில் வளர்ச்சி குன்றியே இருக்கிறது. தரமான எழுத்தாளர்கள் ஆக்க இலக்கியத் துறையிலிருந்து ஒதுங்கியிருப்பதால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் மறுத்துவிடுவதற்கில்லை மேலும் எழுத்தாளர்கள் தமக்குள் ஏற்பட்டுள்ள கருத்துவேற்றுமைகளைப்பெரிதுபடுத்தி ஒருவர் மேல் ஒருவர் கண்டனம் தெரிவிப்பதிலேயே தங்கள் நேரத்தையும், அறிவையும் செலவிடுகின்றனர்.'

திருநெல்வேலி இந்து இளைஞர் இயக்க ஆதரவில் நடைபெற்ற முத்தமிழ் விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் இலக்கியத்தில் நாம் எனும் பொருள்பற்றிப் பேசிய, இலங்கை இளம் எழுத்தாளர் சங்க தலைவர் திரு. நா. சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. மதிபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், ஈழத்துப் பூதந்தேவஞரின் சரித்திரத்துடனேயே இலங்கையின் இலக்கிய வளர்ச்சி ஆரம்பமாகிறதென்றும் செய்யுள் நடைபயின்ற தமிழ்மொழிக்கு புத்துருவமாகிய உரை நடை உருவம் கொடுத்து கற்றோர் கல்லாதார் எல்லோரும் புரியும் வண்ணம் பொருளைத் தெளிவாக விளங்கவைத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரையே சாரும் என்றும் கூறினுர்.

மேற்படி விழாவை நல்லூர் கிராம சபைத்தலைவர் திரு. கி. துரைசிங்கம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். திரு. எஸ். கனகரத்தினம் தொடக்கவுரை நிகழ்த்திஞர். முன்னைநாள் நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் வாழ்த்துரை வழங்கினுர். இறுதியில் இணைச் செயலாளர் திரு. சி. திருச்செல்வம் நன்றிகூறினுர்.

## வீடமைப்புச் சங்கம் மந்திரிக்கு நன்றி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் வீடில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்குவட இலங்கை வீடமைப்புச் சங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு வீடமைப்பு மந்திரி ஜனுப். எச் எம். முகம்மது, காணி நீர்ப்பாசனமந்திரி திரு. ஸி. பி. டி. சில்வா, நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆகியோர் அளிக்கும் உதவிக்குநன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்று வட இலங்கை வீடமைப்புச் சங்கத்தின் ஐந்தாம், ஆறும் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது.

கந்தர்மடம் சைவப்பிரகாசவித்தியாசாலையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர் திரு. எஸ். மகேஸ்வரஐயர், உபதலைவர் திரு. ரி. சீனிவாசகம், காரியதரிசி திரு. எஸ். கந்தமூர்த்தி, உபகாரியதரிசி திரு. வை. இராமகிருஷ்ண, தனதிகாரி திரு. எஸ்.மகேசன். திருவாளர்கள். க. கனகசபாபதி, கே. தளையசிங்கம்ஆகியோர் [illegible]யாளர்களாகவும் திரு. கே. இராமநாதன் கணக்குப் பரிசோதகராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# ஐயாறன் எழுதுகிறது

பிரான்ஸிலிருந்து ஒரு மூதாட்டி யாழ்ப்பாண வந்து இரண்டு வாரம் இருந்துவிட்டு நேற்று முன்தினம் இந்தியா சென்றுர். அவர் பெயர், மிஸஸ் ரேனுல்ட்ஸ். வயது 60க்கு மேல் இருக்கும்.

ஏன், எப்படி இங்கு வந்தார் தெரியுமா? பிரான்ஸில் அவர் நல்ல பதவி வகிக்கிறுர். பணமுமுண்டு. ஆனுல் இந்த வாழ்க்கையின் நோக்கமென்ன என்பதை அறிய மிகத் தாகம்கொண்டார். ஸ்ரீ சங்கராச்சாரியாரின் அத்வைத வேதாந்தம் அவருக்கு மிகவும் பிடித்தது. இந்தியாவிலுள்ள ஆத்ம ஞானிகளைப் பற்றிக் கேள்விப்பட்டார். அதனுல் திடீரென இந்திய புண்ணிய பூமியைத் தரிசிக்கப் புறப்பட்டுவிட்டாராம்!

இந்தியாவில் யாரையும் தெரியாது. அங்கு யுத்தம் நடந்துவருகிறது என்று தெரிந்தும் சற்றும் அஞ்சாமல், தெய்வத்தையே நம்பிப் புறப்பட்டுவிட்டார். கப்பலில் வருகையில், இலங்கையில் ஜெர்மன் சுவாமி இருப்பதாயும், இவ்விஷயத்தில் நல்ல வழிகாட்டலாமென்றும் ஒரன்பர் சொல்லி விலாசமும் கொடுக்க, கொழும்பில் இறங்கி நேரே செல்லச்சந்நிதிக்கு வந்து விட்டார்.

ஃ ஃ ஃ

சந்நிதியிலே 'சும்மாஸ் தான்' ஆசிரமத்தில் தான் சுவாமி இருப்பது. "சும்மா இரு'' என்ற மகாவாக்கியமே சுவாமியை மிகவும் கவர்ந்தது. அதை என்றும் மறவாமலிருக்க, தம் கையிலே தமிழில் பச்சைகுத்திக்கொண்டிருக்கிறுர் அப்பெரியார்! முன்னர் இதைப் பற்றியெல்லாம் எழுதியதாக ஞாபகம். செல்லச் சந்நிதியில் "என்ன செய்கிறீர்கள்'' என்று கேட்டதற்கு, "சும்மா, சும்மா இருக்கிறேன்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னுர். சாப்பாட்டைப் பற்றிக் கேட்டதற்கு, பக்கத்திலே ஆனந்த ஆசிரமத்திலிருந்து உணவு கிடைப்பதாகவும், "சும்மா இருந்தால்'' எல்லாம் கிடைக்குமென்றும் சொன்னுர். சும்மா இருப்பதென்பது சோம்பேறித்தனமாகத் தூங்கிக்கொண்டு பொழுதை அவமாகக் கழிப்பதா? இல்லைஇல்லை. வேறு எதையும் செய்துவிடலாம். கடல்மேல் நடக்கலாம். கனல்மேல் இருக்கலாம். ஆனுல் இந்தச் சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிதென்று கூறுகிறுர் தாயுமானவர்.

"சும்மா இரு சொறல்ல'' என்று பெம்மான் முருகன் உபதேசித்தாராம் அருணகிரியாருக்கு. உபதேசித்ததும் "அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே'' என்று கூறுகிறுர் அனுபூதியில். அவருக்கு இதன் பொருள் தெரியாதபோது நமக்கு என்ன தெரியும்.

தமிழிலுள்ள இந்த அரிய பொக்கிஷங்களைச் சுவாமி மனனஞ்செய்து ஒப்புவிப்பதைக் கேட்க எனக்குப் பெருமையாக இருந்தது. இந்த ரகசியங்களையும், ஈழத்து யோகர்சுவாமிகளின் உபதேசங்களையும், மகிமைகளையும், அவர் பிரெஞ்சு மூதாட்டியாருக்கு எடுத்து விளக்கி, இந்தியாவிலே ஸ்ரீ சங்கராச்சாரியாரையும், வடநாட்டிலுள்ள அன்னை ஆனந்தமாயியையும் தரிசிக்கும்படிகூறி, அவரை பலாலியில் விமானமேற்றிவிட்டு வந்தார்.

ஃ ஃ ஃ

'ஈழநாடு' பேப்பரைப் பற்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தென்ரொடீஷிய சுதந்திர பிரகடனத்தை சகலவழிகளாலும் நிறுத்துக'

# பிரிட்டனுக்கு ஐ. நா. கோரிக்கை:

## சிரேஷ்ட காமன்வெல்த் சமாதான தூது அனுப்ப பிரிட்டிஷ் பிரதமர் முயற்சி

நியூயோர்க், அக்.13

தென்ரொடீஷியா ஒரு தலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்வதை பலாத்கார உபயோகம் உட்பட, சகலவழிகளிலும் தடைசெய்யுமாறு பிரிட்டனைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை ஐ. நா. மகாசபை நிறைவேற்றியது. தீர்மானத்துக்குச் சாதகமாக 107 வாக்குகள் கிடைத்தன. தென்னாபிரிக்கா, போர்த்துக்கல் ஆகிய இரு நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. பிரிட்டன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் தென்ரொடீஷியப்பிரதமர் திரு. ஸ்மித்துக்குஅனுப்பியுள்ள சொந்தக் கடிதமொன்றில் தென்ரொடீஷியப் பிரச்னையைத் தீர்க்கும் முயற்சியாக சிரேஷ்ட காமன்வெல்த் பிரதமர்கள் கொண்ட சமாதானக் குழுவை வரவேற்கும்படி கேட்டிக்கொண்டிருக்கிறார்.

திரு. வில்சன் ரேடியோ டெலிவிஷன் மூலம் நிகழ்த்திய ஒலிபரப்பொன்றில், தென்ரொடீஷிய சுதந்திரப் பேச்சுக்கள் முறிந்தவுடன், சகல காமன்வெல்த் நாடுகளுடனும் இதுபற்றித்தொடர்பு கொண்டிருப்பதாகக்கூறினார்.

ரொடீஷியா ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்யுமானால் சங்கிலித்தொடர்போல ஆபிரிக்கா முழுதும் அது குழப்பத்தை ஏற்படுத்தும்என்றும், வெள்ளையர்களும், கறுப்பர்களும் பெருமளவில் உயிரிழக்கநேரிடும் என்றும் அவர் கூறினார்.

பிரிட்டனிலுள்ள சகல அரசியற்கட்சிகளும், சகல காமன்வெல்த் நாடுகளும், ஐ நா. வும் ஒருதலைப்பட்ச சுதந்திரத்துக்கு மாறாக இருப்பதாகவும் எடுத்துக்காட்டப்பட்டது.

சட்ட விரோதமான இவ்வித சுதந்திரப் பிரகடனத்தின்மூலம்ரொடீஷியா தனியாக இருக்கவேண்டியிருக்குமென அவர் கூறினார்.

''சுதந்திரம் சம்பந்தமாக பிரிட்டன் தெரிவித்த பல யோசனைகளை ரொடீஷியா நிராகரித்து விட்டது. நாங்கள் விட்டுக்கொடுக்கவில்லை. மீண்டும்சிந்திக்குமாறு திரு. ஸ்மித்தை கேட்டுக்கொண்டேன்'' என்றும்பிரதமர்குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் கன்ஸர்வேட்டிவ் கட்சியின் மகாநாடு இன்று ரொடீஷியா சம்பந்தமாக விவாதிக்க விருக்கிறது.

நேற்றைய பொதுச்சபை விவாதத்தில் அமெரிக்க, இந்திய பிரதிநிதிகள் ஒருதலைப்பட்ச பிரகடனம் பற்றி ரொடீஷியாவுக்கு எச்சரிக்கை விடுத்தார்கள்

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் ரொடீஷியாவுக்கு காமன்வெல்த் சமாதானக் குழு அனுப்புவதுபற்றி சாஸ்திரிக்கு எழுதியிருக்கிறார்.

இதற்கிடையில் பிரதமர் திரு. இயான் ஸ்மித், கிறிஸ்மஸ் சமயத்தில் ஒருதலைப்பட்சபிரகடனம் செய்வது பற்றி யோசித்துவருவதாய் கூறினார்.

# 'பாகிஸ்தானுக்கு மீண்டும் ஆயுத சப்ளை வேண்டாம்'

## அமெரிக்காவுக்கு சாஸ்திரி எச்சரிக்கை

புதுடில்லி, அக். 13

"பாகிஸ்தானை மீண்டும் ஆயுதபாணியாக்குவதின் அபாயத்தை அமெரிக்கா உணருமென நம்புகிறேன்'' என திரு. லால்பகதூர் சாஸ்திரி முன்னணிப்பகுதியில் படைவீரர்களிடம் பேசுகையில் கூறினர்.

''இப்போதும்கூட பாகிஸ்தான் சமாதான நோக்கம் கொண்டிருக்கவில்லை. அமெரிக்காவிடமிருந்தும், இதர நாடுகளிலும் ஆயுதம்பெற அது முயற்சித்துக்கொண்டிருக்கிறது. ஆனல் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவியளிக்கும் அபாயம் பற்றி எங்கள் எச்சரிக்கையை அமெரிக்கா உதாசீனம் செய்யாதென நம்புகிறோம்'' என்றார் சாஸ்திரி.

சீனவுக்கு எதிராக உபயோகிக்கவே அமெரிக்காவிடமிருந்து ஆயுத உதவி பெற்றது பாகிஸ்தான். ஆனல் அவற்றை இந்தியாவுக்கு விரோதமாக உபயோகித்தது. இதனல் ஏற்பட்ட விளைவு குறித்து இப்போது ஒவ்வொரு இந்தியனும் பெருமையுடன் தலைநிமிர்ந்து செல்லமுடியும். பாகிஸ்தான் இப்பிழையைச் செய்யாதென நம்புகிறேன் என்றும் அவர் கூறினர்.

நேற்று ஐ. நா. பொதுச்சபையில் பேசிய வெளிநாட்டுமந்திரி திரு. சுவர்ண் சிங், காஷ்மீர் சட்டபூர்வமாகவும், அரசியல் சட்டத்தின்படியும், தார்மீகப்படியும் இந்தியாவின் ஒருபகுதி என்பதைத் தெளிவாகத் தெரிவிப்பதாகக் கூறினர்.

18 ஆண்டுகளாக பாகிஸ்தான் எங்களுக்கு எதிராகக் குழப்பம் செய்துவருகிறது. அதை ஆக்கிரமிப்பு நாடு எனப் பிரகடனஞ்செய்ய ஐ. நா.வுக்கு இயலாமற்போய் விட்டது. கடந்த 6 மாதங்களில் பாகிஸ்தான் இரு தடவை இந்தியாமீது படையெடுத்த அதேசமயம் சீனப் பயமுறுத்தலும் நீடித்தது என்றார் அவர்.

காஷ்மீரில் பழைய யுத்த நிறுத்தக்கோடு இனியும் செல்லாது. அது ஏற்கனவே செத்துவிட்டது என்றும் அவர் கூறினர்.

தென்ரொடீஷியா பற்றி அவர் குறிப்பிடுகையில் எதிர்காலநிலைமைக்கு பிரிட்டனே பொறுப்பென்றும், சுதந்திரம் அளிக்காமலிருக்கும் பல பிரிட்டிஷ் காலனிகளுக்கு பிரிட்டன் உடனடியாகச் சுதந்திரம்வழங்க வேண்டுமென்றும் சுவர்ண் சிங் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் மூன்றுவது நாட்டு வழியாக பாகிஸ்தானுக்கு மேற்கு ஜெர்மனி விமானங்களை சப்ளை செய்வதாகக் கூறப்படுவது பற்றி அந்நாட்டுத் தூதராலயத்திடம் இந்தியா தொடர்புகொண்டு அவ்வாறு அது செய்யாதென நம்புவதாய்க் கூறியது,

ஆனல் மேற்கு ஜெர்மன் தூதராலயம்இந்தப்புகாரை மறுத்தது. இந்தோ-பாக் கைகலப்பை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு ஆயுதம் அனுப்பும் [illegible] ரத்து செய்யப்பட்[illegible]தென்றும், இதுவரை அப்படி செய்துவும் நடைபெற[illegible] தூதரகம் கூறியது.

## பாக். தரப்பில் 5137 பேர் மாண்டனர்

புதுடில்லி, அக். 12

இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தில் 5137 பாகிஸ்தான் இராணுவத்தினர் மாண்டனர் என்றும் 73 பாகிஸ்தான் விமானங்கள் அழிக்கப்பட்டன என்றும் 475 பாக். டாங்கிகள் அழிக்கப்பட்டன அல்லது கைப்பற்றப் பட்டன என்றும் இங்கு அறிவிக்கப்பட்டது.

## பேட்டன் டாங்கிகள் தோற்றது ஏன்?

நியூயோர்க், அக்.13

''நியூயோர்க் டைம்ஸ்'' பத்திரிகையின் ராணுவ நிருபர் தனது பத்திரிகைக்கு அனுப்பியுள்ள செய்தியில், பாகிஸ்தான் 200 முதல்300 பேட்டன் டாங்கிகளை சண்டையில் இழந்தது என்றும், முரட்டுத்துணிச்சலும், மோசமான சப்ளை முறையுமே இவ்வித பெருஞ்சேதத்துக்குக் காரணம் என்றும் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானிய பேட்டன் டாங்கிகள், இந்திய டாங்கிகளினல் சூழப்பட்டு இரு புறங்களிலும் தாக்குதலுக்கு உள்ளாகின என அவர் மேலும் கூறியிருக்கிறார்.

## வியட்காங்கியர் தப்பினர்

சைகோன், அக்.13

சைகோனுக்கு வடக்கே 300மைலில், அமெரிக்க, தென்வியட்னமிய துருப்புக்களால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த பெருமளவு கம்யூனிஸ்ட் படைகள் தப்பிச் சென்று விட்டதாய் அறிவிக்கப்பட்டது. இரு வடவியட்னம் பட்டாளங்களும், 3 வியட்காங் பட்டாளங்களும் தப்பிச்சென்றன.

# ஸ்ரீநகரில் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம்

## நால்வர் மாண்டனர்

ராவல்பிண்டி, அக். 13

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ நேற்று தலைமைக் காரியதரிசி யுதாண்டுடன் காஷ்மீர் அரசியல் தீர்வுபற்றிப் பேச்சு நடத்தினர்.

இதற்கிடையில் ஸ்ரீநகரில் நேற்று ஏற்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது காரணமாக நால்வர் மாண்டனர் என்றும், இருவர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களையும், கைக்குண்டுகளையும் வீசியதாக அறிவிக்கப்படுகிறது.

சர்வஜன வாக்கெடுப்புக் கிளர்ச்சியில் மாணவர்களும் சேர்ந்துகொண்டிருப்பதாயும், ஜம்மு—காஷ்மீரில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருப்பதாயும், ஸ்ரீநகரில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதாயும் 'காஷ்மீர் குரல்' வானொலி அறிவித்தது.

அங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை பெரிய படைகளால் கூட சமாளிக்கமுடியாது என அது மேலும் கூறியது.

தீவிரவெறி பிடித்த ஜனசங் தொண்டர்கள் ஆயுதபாணியாக, இந்தியப்படைகளுடன் சேர்ந்துகொண்டு வீடுகளுக்கும், கிராமங்களுக்கும் தீமூட்டி முஸ்லிம்களைத் துரத்திவிடுகிறார்கள் என தொடர்ந்து அது கூறியது.

அதேசமயம் கிழக்குப் பாகிஸ்தானில் சுதந்திரக் கிளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாயும், பாகிஸ்தான் துருப்புக்கள் கிறிஸ்தவ தேவாலயங்கள் உட்படப் பல கட்டிடங்களை தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டு கிறிஸ்தவர்களை விரட்டி வருவதாயும் இந்தியச் செய்தி ஒன்றுகூறுகிறது

# கம்யூனிஸ்ட் தலைவர்களின் இல்லங்கள் நொறுக்கப்பட்டன

## இந்தோனேஷியாவில் ஆர்ப்பாட்டம்

ஜாகர்த்தா, அக். 13

இந்தோனேஷியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரு உப தலைவர்களின் இல்லங்களை 200 ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று நொறுக்கினர். கட்சி தஸ்தாவேஜுகளுக்கும், சொந்தப் பொருட்களுக்கும் அவர்கள் தீமூட்டினர்.

ஆனல் இந்த இரு தலைவர்களும் வீடுகளில் இல்லை. எங்கிருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை.

கம்யூனிஸ்ட் தலைவர் ஐடிட்டின் வீடு முன்பு தாக்கப்பட்டது. அவரது இருப்பிடமும் தெரியவில்லை.

கடந்த இருதினங்களாக இவ்வித தாக்குதல்கள் பல நடத்தப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவில் 14 பல்கலைக்கழகங்களும், மற்றும் பல ஸ்தாபனங்களும் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கின்றன. கம்யூனிஸ்ட் சார்பான 4 மாணவர் ஸ்தாபனங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது

நாளுக்கு நாள் கம்யூனிஸ எதிர்ப்பு வளர்வதாக அறிவிக்கப்படுகிறது

ஜனதிபதி சுகர்னோநேற்று தமது மந்திரிசபைக் கூட்டத்தில் அடுத்த மாதம் அல்ஜியர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாடுபற்றி விவாதித்தார்.

நாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் இந்தோனேஷியாவைப் பலவீனப்படுத்தவில்லை என அவர் கூறினர்.

இந்தோனேஷியாவில், கிளர்ச்சி பெரும்பாலும் ஒடுக்கப்பட்டதாய் அரசாங்கம் கூறியிருக்கிறது.

சேது சமுத்திர திட்டத்துக்காக

# பாக்கு நீரிணையில் கடல் பரிசோதனை

சென்னை, அக், 12

சேது சமுத்திர திட்ட நிபுணர்கள் மிக விரைவில் பாக்குநீரிணை கடல் அடித்தளம் பற்றியும், அடித்தள மண்ணின் தன்மை பற்றியும் ஆராய்ச்சி நடத்துவார்கள். இந்திய அணுசக்திக் கமிஷனிடமிருந்து ரேடியோ சக்திக் கருவி ஒன்றை வருவித்து இந்த ஆராய்ச்சியை சேது சமுத்திரத் திட்டத்தின் ஒரு பகுதியாக பரிசோதனை செய்வார்கள்.

சேதுசமுத்திரத் திட்டத்துக்காக இப்பொழுது நடைபெற்று வரும் ஆரம்ப பரிசோதனைகள் 1966-ம் வருடம் அக்டோபர் - நவம்பர் மாதத்தில் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோடிக்கரைக்கும், பருத்தித்துறைக்கும் இடை நடுவேயுள்ள ஒரு பகுதியிலேயே ரேடியோ சக்திக் கருவி மூலம் பரிசோதனை நடைபெறும். பாக்குநீரிணையின் அலைகளின் தன்மை பற்றி அறியவும் அலைப்பதிவுக் கருவிகள் இரண்டு வருவிக்கப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்துக்கு எதிராக உள்ள இந்திய தரைக்கும் மன்னர்க் குடாவுக்கும் இடையே ஒரு கால்வாய் வெட்டுவதே சேதுசத்திரத் திட்டமாகும். இதனல் இலங்கையைச் சுற்றிச் செல்லும் கிரமம் குறைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எதிரிகளுக்கு கடூழியச்சிறை

சாவகச்சேரி, புதன்

இராமநாதபுரத்தைச்சேர்ந்த எஸ். சின்னத்தம்பி என்பவருக்குப் படுகாயம் விளைவித்ததாகவும் எஸ். பொன்னையா என்பவருக்குக் காயம் விளைவித்ததாகவும் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். இராசநாயகம், வி. சின்னத்தம்பி, எஸ். கதிர்காமநாதன் ஆகியவர்கள்மீது கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி மாஜிஸ்திரேட் திரு. ஆர். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக்கண்டு நான்கு மாத கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

## ஒலிபெருக்கிவழக்கு தள்ளுபடி

சாவகச்சேரி, புதன்

கார் ஓடிக்கொண்டிருக்கும்போது ஒலிபெருக்கி பாவித்ததாக பொ. திருநாவுக்கரசு என்பவர் மீது குற்றஞ்சாட்டி சாவகச்சேரி பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. றுபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபின் நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தார்.

யாழ்ப்பாணம் ஏ. எஸ். பி சண்முகம், கன்ஸ்டபிள் செல்லத்துரை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

எதிரி சார்பில் பாரிஸ்டர் திரு. எம். சிவானந்தன், புறக்டர் திரு. எஸ். பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானூர். சாவகச்சேரி பொலிசைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டர் தேவசகாயம் வழக்கை நடத்தினூர்.

## டாக்டர்

அடிஸ்அபாபா, அக். 13

எதியோப்பியா வந்திருக்கும் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு ஹெயிலிஸெலாஸி பல்கலைக்கழகம் நேற்று ''இலக்கிய கலாநிதி'' என்ற (டாக்டர்) பட்டம் அளித்து கௌரவித்தது.

அடிஸ்அபாபாவிலுள்ள இந்தியப் பிரஜைகள் ரூபா 2 லட்சம் செக் ஒன்றை தேசிய பாதுகாப்பு நிதிக்காக டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் ஒப்படைத்தனர்.


## ஐந்தாம் வகுப்பு
### மூன்றும் தவணை

ஐந்தாம் வகுப்புமாணவர் தாம் படித்த பாடங்களைத் திருப்பிப் பயிற்சி செய்யவும், பரீட்சையில் வருவன போன்ற வினாக்களுக்கு விடையெழுதிப் பழகவும் ஏற்ற பயிற்சிப் புத்தகங்கள் தயாராக உள்ளன.

வினாப்பத்திரங்கள்

| | |
|---|---|
| தமிழ் (பாஷை) | சதம் 70 |
| கணிதம் | சதம் 70 |
| சூழல் | சதம் 70 |
| ஆங்கிலம் | சதம் 70 |

பாடத்திட்டம் முழுவதையும் வினா விடை உருவத்தில் அமைந்த

ஐந்தாந்தரச் சூழல் (1100 வினாவிடை) ரூ. 1-80

ஐந்தாந்தர மொழி நூல் (பயிற்சிக்குரிய) ரூ. 1-40

டிை நூல்களை எழுதியவர்: வே. க. கந்தசாமி (புதுமை லோலன்)

விற்பனையாளர்: அனந்தா அச்சகம் 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## சிங்களப் பட்டினசபைக்கு தமிழ் காரியதரிசி
### வேலையை ஒப்படைக்க தலைவர் மறுப்பு

காலி, புதன்

வத்து கெதர பட்டினசபைக்கு புதிதாக அண்மையில் நியமனம் பெற்ற தமிழ் காரியதரிசியிடம் பட்டினசபை வேலையை தான் ஒப்படைக்கத் தயாராக இல்லை என்று பலப்பிட்டி எம். பி.யும் பட்டினசபைத் தலைவருமான திரு. எஸ். சி. டி' சில்வா நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்,

1956-ம் ஆண்டிற்கு முன்னரே சிங்களத்தில் தங்கள் பட்டின சபை வேலைகள் யாவும் நடைபெற்றதாகவும் தற்பொழுது நியமனம் பெற்ற தமிழ்க் காரியதரிசிக்கு வேலை செய்ய இடங்கொடுத்தால் எல்லா வேலைகளும் குழப்பத்தில் முடிந்துவிடுமென்றும், பட்டின சபைப் பகுதி சிங்களப் பகுதியில் அமைந்துள்ளதென்றும் சிறந்த சிங்கள அறிவு இல்லாமல் எவரும் காரியதரிசியின் வேலையை செவ்வனே செய்ய முடியாதென்றும், பட்டினசபைத் தலைவர் மேலும் நமது நிருபர்கேட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வரவேற்புக் கூட்டம்

மட்டக்களப்பு, புதன்

அகில இலங்கை தமிழ் ஆசிரிய சங்கத்தின் ஆதரவில் சீனுவுக்கு சென்று தாயகம் திரும்பியுள்ள மேற்படி சங்க நிறுவனக் காரியதரிசியான திரு. டி' எஸ். கே. வணசிங்கவுக்கு மொழிவழித் தொழிற் சங்கங்கள் ஒன்று சேர்ந்து வரவேற்புக் கூட்டம் ஒன்றை நடத்தின.

கூட்டத்துக்கு திரு. வ. பாலசிங்கம் தலைமை வகித்தார். கூட்டத்தில் வித்துவான் சா. இ. கமலநாதன் அருள்ராசா உட்படவேறு பலரும் உரை நிகழ்த்தினர்.

## பஸ்நிலையத்தில் ஜேப்படி!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் ஜேப்படி அதிகரித்துவருவதாகத் தெரியவருகிறது. பிரதானமாக பஸ்வண்டிகள் நிலையத்திற்குவந்ததும் பஸ்ஸில் செல்வதற்காக மக்கள் நெருங்கி இடிபட்டுக்கொண்டு நிற்கும்பொழுதே இந்தஜேப்படித்திருட்டுநபர்கள் தங்கள் கைவரிசையை காண்பிக்கின்றனராம்.

நேற்று யாழ்ப்பாண பஸ்நிலையத்திலிருந்து மூளாய்க்குச் செல்லும் ஒரு பிரயாணியிடமிருந்து 100 ரூபா ஜேப்படிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகரித்துவரும் திருட்டு முயற்சியைத் தற்பொழுது பொலிசார் கண்காணித்துவருகின்றனர்.

## மின்சாரம் தாக்கி மரணம்

யாழ்ப்பாணம், வியா.

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையில் தோட்டக்காரனுகக் கடமையாற்றிய சங்கரன் சுப்பன் என்பவர் மின்சாரத்தால் தாக்குண்டு மரணமானூர்.

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைப்பதற்கு 'மோட்டரி'லிருந்த மூடியை அவர் திறந்ததாகவும், பின் மூட எத்தனித்தசமயம், மின்சாரத்தால் தாக்குண்டதாகவும் மரண விசாரணையின் போது கூறப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அம்பலவாணர் விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு அவசியம்

பம்பலப்பிட்டி, புதன்

'விவசாயத்துறையில்நாடு முன்னேறுவதற்கு எல்லோரது ஒத்துழைப்பும் அவசியமென விவசாய, உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா, விவசாய இலாகாவைச் சேர்ந்த லொறிச்சாரதிகள் சங்கத்தின் வருடாந்தக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பண்டா மேலும் பேசுகையில் கூறியதாவது:

விவசாயத்துக்கான இயந்திரங்கள் சேவையிலீடுபடுத்தப்பட்ட சில நாட்களிலேயே பழுதடைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பின்னர் சில உதிரிப்பாகங்கள் காணுமற்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது விவசாயத்துறையின் முன்னேற்றத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

சமூகசேவை மந்திரி திரு. அசோகா கருணரத்தின பேசுகையில் சிறிய கருத்து வேற்றுமைகளையும் கட்சிப் பாகுபாடுகளையும் மறந்து ஒற்றுமையாக ஒன்றுபட்டு உழைப்பது நாட்டின் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் அவசியம் என்றூர்.

## "பக்தூனிஸ்தான் இயக்கம்
### இந்தியர்கள் ஆதரவு காட்டவேண்டும்"

புதுடில்லி, அக். 13

ஆப்கானிஸ்தானிலிருந்து கான் அப்துல் கபார்கான் நடத்தும் பக்தூனிஸ்தான் இயக்கத்துக்கு உருப்படியான உதவி அளிக்க இந்தியமக்கள் தங்களைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும் என கான் அப்துல் காபார் கான் நண்பர்கள் கமிட்டி கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய திரு. ஜகஜீவன் ராம் கூறினூர்.

பக்தூனிஸ்தான் இயக்கத்துக்கு அரசாங்கம் தார்மீக ஆதரவு தெரிவித்தால் மட்டும் போதும்'' என்றும் அவர் கூறினூர்.

''பக்தூனிஸ்தான் மக்களுக்கு மட்டுமன்றி தமக்கு பாகிஸ்தான் மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையை பாகிஸ்தான் வழங்கவேண்டும்.

''பக்தூனிஸ்தான் கோரிக்கை முற்றிலும் நியாயமானது. ஏனெனில் இக்கோரிக்கை மதத்தின் அடிப்படையில் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலைபெறுவதற்காக நடந்த போராட்டத்தின் போது பக்தூன் மக்களுக்கு தனித்தாயகம் என்பதை இந்தியமக்கள் ஆதரித்து வந்தனர். எனவே பக்தூனிஸ்தான் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பது இதற்கு இசைவாகவே இருக்கும்'' என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

தனியார்

## ஆலைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமாம்

பம்பலப்பிட்டி, புதன்

தனிப்பட்டவர்களின் அரிசி ஆலைகளை அரசாங்கம் எடுத்து நடாத்தவேண்டும் எனப் பல அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இப்படிச் செய்வதால் தற்பொழுது நிலவும் லஞ்ச ஊழலும் சீர்கேடும் குறைக்கப்படலாம்அத்துடன் அரிசி ஆலைகளை கூட்டுறவு இலாகா பொறுப்பேற்று நடத்துமானல் சிறந்த நன்மைகள் பொதுமக்களுக்குண்டு என்றும் மேலும் அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## விதிகளில் திருத்தம் செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்களை பொதுமக்களுக்கு விளக்கும் நோக்கத்துடன் நிச்சாமம் விக்கினேஸ்வர வித்தியாசாலையில் ஒரு பொதுக் கூட்டம் சென்ற சனிக்கிழமை திரு. த. தம்பித்துரை தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் ச. கந்தசாமி, எஸ். நரசிங்கம், எம். கணேசன் ஆகியோர் உரை நிகழ்த்தினூர்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டுறவுப் பரிசோதகர்கள் சங்க நிர்வாகிகள் விதிமுறைகளுக்கமைய நடந்துவரக் கட்டுப்படுத்துவதுடன் சங்கத்தில் ஏற்படும் நஷ்டங்களையும் தற்குறைவுகளையும் தவிர்ப்பதற்கும் பொறுப்பாயிருக்கத்தக்கதாக விதிகளில் திருத்தம் செய்யப்படவேண்டும்.

கூட்டுறவு விதிகளை நன்கறிந்தவர்களையே கூட்டுறவுச்சங்க நிருவாக சபைக்குத் தெரிவு செய்யவேண்டும்,

சங்கானை கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் முறையான காரியதரிசி பதவி நீக்கம் செய்ததை உடன் விசாரணை செய்து சங்கத்தை திருத்தி அமைக்க உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும்.


REGAL--JAFFNA
NOW SHOWING!

Tony young
IN
HE RIDES TALL


## கடத்தலுக்கு கடூழியச் சிறை!

காலி, வியாழன்

காலித்துறைமுகத் தொழிலாளரானஏ. எச். தாஜுடீன் என்பவர்மோட்டார் உதிரிப்பாகங்களைக் கடத்தல் செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் காலி மாஜிஸ்டிரேட் திரு. கொலின்மெண்டிஸ் ஆறு மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ரூபா 1500 பெறுமதியான உதிரிப் பாகங்களை கடத்தல் செய்ததாக காலி பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அப்பீல் செய்வதாகவிருந்தால் ரூபா 500 பிணையில் செல்ல அனுமதிக்கப்படுமெனதீர்ப்பளிக்கப்பட்டது,

## ஜெர்மனியில் இலங்கைத் தொழிலாளர் தலைவர்கள்

பெர்லின், அக். 13

இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பிரமுகர்களான திரு. ஜேம்ஸ் அப்புகாமியும், டாக்டர் சுப்பிரமணியமும் கடந்த செவ்வாய்க்கிழமை இங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 10 நாட்கள் தங்கியிருப்பார்கள்.

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்வதற்குத் தங்களுக்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக அவர்கள் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சம்மேளனத்துக்கு நன்றி கூறினூர். தோட்டத்தொழிலாளர்களினதுமட்டுமன்றி இலங்கைத் தொழிலாளர் அனைவரதும் வாழ்த்துக்களை தாங்கள் கொண்டு வந்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது !

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-00, 9-30 க்கும்
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்

" இன்பம் தேடுது இளம் மனசு ! - அதிலே
இருக்கும் வகைகள் பல தினுசு !
அன்பு நிறைந்ததும் பெண்ணிடத்தில் - என்ற
அறிவு விளக்குது இப்படத்தில்"



முத்துராமன், புதுமுகம் நளினி, அசோகன், நாகேஷ், ராமதாஸ், மனோரமா, சின்னப்ப தேவர் நடித்த

தெய்வத் திருமகள்

15-ம் திகதி வெள்ளி முதல்

[illegible] - கெப்பிட்டல் - கொழும்பு - மொடர்ன் - பண்டாரவளை முதலிய திரைகளில் காண்பிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்டன் கேடய

## கரபந்தாட்ட இறுதிப்போட்டி

உடுப்பிட்டி, வியா.

கரவெட்டி யூனியன் விளையாட்டுக் கழகத்தாரால் சென்ற வாரம் நடாத்தப்பட்ட 'யாழ்டன்' வெற்றிக்கேடயத்துக்கான கரபந்தாட்டப்போட்டியின் இறுதிப்போட்டிக்கு இமையாணன் விளையாட்டுக் கழகமும், வதிரி பொம்பேஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வருகிற ஞாயிற்றுக்கிழமை கரவை பூந்தோட்ட மைதானத்தில் நடைபெறவிருக்கும் 'யாழ்டன்' வெற்றிக் கேடயத்துக்கான இவ்விறுதிப்போட்டிக்கு ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம், உடுப்பிட்டி எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம், நெல்லியடி பட்டின சபைத் தலைவர் திரு. பொன்னையா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். அன்றிரவு மின்னொளியில் ஒலும்பிக் யூனியன் விளையாட்டுக்கழகமும் கரவெட்டி யூனியன் விளையாட்டுக்கழகமும் கலந்து கொள்ளும். இதற்குரிய ஏற்பாடுகளை கரவை யூனியன் விளையாட்டுக்கழகக் காரியதரிசி திரு. ஏ. துரைசுவாமி செய்துள்ளார்.




## கொழும்பு

வியாழன் 14-10-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைப்படஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 பேச்சு, 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

## சமனுக முடிந்த போட்டி

குடும்பசிட்டி, புதன்

திருகோணமலை இந்துக் கல்லூரி பழைய மாணவர்க்கும் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர்க்குமிடையில்சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்றில் இரு கல்லூரி கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டுக் கொண்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நிகழ்ந்த இப் போட்டிக்கு திரு. வி. குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# இரு ஆட்டங்களிலும் சென் ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையில் நேற்று முன்தினம் சென். ஜோன்ஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இரு பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையேயான ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி யூனியன் கல்லூரி கோஷ்டியை இரு பிரிவுகளிலும் வெற்றி பெற்றது.

முதலில் நடைபெற்ற இரண்டாம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையேயான ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் இடைவேளைக்கு முன் ஒரு கோல்களையும் போடவில்லை. இடைவேளைக்கு முன் ஆட்டம் அவ்வளவு ரசிப்பாக இருக்கவில்லை. இடைவேளைக்கு பின் ஆட்டம் விறுவிறுப்பாகவும், உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு உற்சாகத்தை அளிக்கக் கூடிய விதத்திலும் அமைந்திருந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு பத்து நிமிடங்களுக்கு சற்று முன்னதாக சென். ஜோன்ஸ் கல்லூரி முன்னணி வீரர்களின் திறமையான விளையாட்டினுல் அடுத்தடுத்து வீரர் விஜயகுமார் யூனியன் கோல்நுழைவாசலுக்குள் மூன்று கோல்களை இறக்கி வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர். இப்போட்டியில் யூனியன் கோஷ்டி ஒரு கோலையும் போடாததால், சென் ஜோன்ஸ் கோஷ்டி யூனியன் கோஷ்டியை 3—0 கோல்களால் தோற்கடித்தது.

முதலாம் பிரிவுகளுக்கிடையேயான ஆட்டத்தில் எதிர்பாராததற்கு மாருக யூனியன் கல்லூரியை சென். ஜோன்ஸ் கல்லூரி வெகு இலகுவாக 7—0 கோல்களால் வெற்றி பெற்றது. யூனியன் கல்லூரி முன்னணி வீரர்கள் எவ்வளவு திறமையாக விளையாடியும் ஒரு பந்தையாவது கோலுக்குள் போட முடியாமல் போய் விட்டது. சென். ஜோன்ஸ் கல்லூரி முன்னணி வீரர்கள் குயின்ரஸ் ரட்ணம், சூரியகுமார், விபுலானந்த மூர்த்தி, தெய்வேந்திரா ஆகியோர் முறையே 1, 1, 1, 4 கோல்களை போட்டு தமது பக்கத்துக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தனர்.

ஹாக்கி

## மாத்தளைக்கு வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் விளையாட்டரங்கில்பதினேழு வயதுக்குட்பட்ட யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர் தெரிவு கோஷ்டிக்கும், மாத்தளை பாடசாலை மாணவர் தெரிவு கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் யாழ்ப்பாணக் கோஷ்டியை 6-0 கோல்களால் மாத்தளைக் கோஷ்டி தோற்கடித்தது. மாத்தளைக் கோஷ்டியினர் இப்போட்டியில் மிகவும் திறமையாக விளையாடி ஹாக்கி ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

இதனையடுத்து இருபதுவயதுக்குட்பட்ட யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர் தெரிவுக்கோஷ்டிக்கும், மாத்தளை பாடசாலை மாணவர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாண கோஷ்டியை 3—0 கோல்களால் மாத்தளைக்கோஷ்டி தோற்கடித்தது.

## மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர்கல்லூரி மேற்பிரிவு மாணவிகளுக்கான பரிசளிப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இப்பரிசளிப்புவிழாவில் பிரதம அதிதியாகஉள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கலந்து கொண்டார்.

''கல்விகற்ற பின்னர் அரசாங்க உத்தியோகத்தை எப்போதும் எதிர்பார்க்கக் கூடாது. கலை கலாச்சார வளர்ச்சிக்கு உதவுவதோடு இந்த நாட்டின் அபிவிருத்திக்கு சிரித்த முகத்தோடு உதவி அளிக்க வேண்டும். பெண்கள் தங்கள் குடும்ப உயர்ச்சிக்காக கணவனுக்கு ஆக்கமும் உதவியும்அளித்து நாட்டு வளர்ச்சியில் ஈடுபட வேண்டும்'' என்று மந்திரி பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலையின் வளர்ச்சி பற்றிய ஆண்டறிக்கையை கல்லூரி அதிபர் திருமதி ஆர். சின்னையாவாசித்தளித்தார்.

கல்லூரி ஆரம்பகால அதிபராகக் கடமையாற்றிய திருமதி பத்மன் மாணவிகளுக்குப் பரிசில்களை வழங்கினுர். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கூட்டுறவுவழியே சிறந்தது

### பிரதமர் டட்லி விளக்கம்

அனுராதபுரம், புதன்

'பொருளாதார சுதந்திரத்தை நாம் புரட்சிவழியினுல் பெற்றுக்கொள்ள முடியாது. அதனை கூட்டுறவு இயக்கத்தின் மூலமே நாம்பெற்றுக்கொள்ளலாம். கூட்டுறவு இயக்கத்திற்கும் ஜனநாயககொள்கைகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு' என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா காகம என்ற இடத்தில் ஒரு பலநோக்குகூட்டுறவுக்கடையொன்றை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பலர் ஜனநாயகத்தைப் பற்றி மேடைகளில் பிரஸ்தாபிக்கின்றனர். ஆனுல் அதன் உண்மைக்கருத்து என்ன என்பது பலருக்கு புலப்படவில்லை. ஜனநாயக அடிப்படையில் பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், தனிப்பட்ட கருத்தை கூறுவதற்குள்ள சுதந்திரம் இவை அடங்கும். பொருளாதாரஅபிவிருத்தி குன்றியதன்காரணமாக சில நாடுகளில் ஜனநாயகஆட்சி குறைந்துவருவதாக எமக்கு கடந்தகால அனுபவம் போதித்துள்ளது.

## அண்ணு பிறந்ததின விழா

வெள்ளவத்தை, புதன்

அறிஞர் அண்ணுவின் 57-வது பிறந்ததின விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சி உட்படப் பல அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

அறிஞர் அண்ணு எழுதிய புத்தகங்களின் கண்காட்சி [illegible] பெறும்.

# வரி விளம்பரம்

### தேவை

எமது விற்பனைப் பகுதிக்கு சேல்ஸ் மனேஜர், கஷியார், ஸ்ரோர்கீப்பர், பிரதிநிதிகள் தேவை. காசுப்பிணை கட்டக் கூடியவர்கள் மட்டும் 16-ம் திகதி காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

மெரிலான்ட் இன்டஸ்றீஸ் (இலங்கை வங்கி அண்மையில்) 153 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1138

### விற்பனைக்கு வாடகைக்கு கொமிஷனுக்கு

ஹோட்டல், கபே முதலியவைகளுக்கேற்ற தற்கால நவீன தளபாடங்கள் (ஐஸ் பெட்டி, பான் 3, (இங்கிலிஷ் தயாரிப்பு), மாபிள் மேசை 20, உட்பட சகலதும் விற்பனைக்கிருக்கிறது. விரும்புவோருக்கு அதே தளபாடங்களுடன் மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்கோ அல்லது கொமிஷனுக்கோ ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். குடிவகைச் சாய்ப்புகளுக்கு மிகப்பொருத்தமான இடம், விபரங்களுக்கு: சிங்கப்பூர் கபே, 204, ஆஸ்பத்திரி ரோட்' யாழ்ப்பாணம். 1126

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்ரேஷன் சந்தியில் இரண்டு பக்கமும் ரோட்டமைந்த முக்கால்பரப்பு விசாலமுள்ள மூலைக்காணி விற்பனைக்கு இருக்கிறது. கடைகள் கட்டுவதற்குப் பொருத்தமான இடம். மறுவிபரங்களுக்கு: 91, பிரதான தெரு, யாழ்ப்பாணம். 1121

திறமான ஏச் போர் (H-4) விதைநெல்விற்பனைக்குண்டு. பின்வரும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும்: இளைப்பாறிய பெரியதம்பி ஆசிரியர் வீடு, காரைக்கால் ரோட், இணுவில். 1136

புதிய உஷா தையல் மெஷின் விலை ரூபா 400/-. நேரில் பார்வையிடலாம். சரவணமுத்துப் பத்தர், NO. 513, K. K. S. ரோட், தட்டாதெரு, யாழ்ப்பாணம். 1133

### தையல் வேலை

உங்கள் தீபாவளி பண்டிகைக்கு தேவையான உடுப்புகளை குறித்த தவணையில், குறைந்த கூலியில் சிறந்த, நவீன முறையில் தைத்துக் கொடுப்போம். (Favourite) வேவறிட் தையல் நிலையம், 61, மெயின்வீதி, யாழ்ப்பாணம். 1106

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்]இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வைத்தியம்

வாதம், கிரந்தி, நீழிரிவு, தொய்வு, மூலரோகம் குணப்படுத்த உத்தரவாதம் மாதர் - குழந்தைகள் ரோகங்களுக்கு விசேட சிகிச்சை பெறலாம். அதிபர் சாரதா தேவி வைத்திய நிலையம், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். கிளை: சோ. சிவகடாட்ச ஐயர் இல்லம், மணற்காடு, காரைநகர் மேற்கு. 1139

## ஜயாறன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

றிப் புகழ்ந்தார். அது சுடச்சுட செய்திகளைக் கொடுப்பதாயும், மக்கள் அதை விரும்பி ஆவலுடன் படிப்பதாயும்கூறிவாழ்த்திஞர்கள்.

அச்சமபம் அங்கிருந்த ஓரன்பர் ஜெர்மனி செல்லப்போவதாகக் கூறியதும், இப்போது ஜெர்மனி மிகவும் முன்னேறிசெல்வசிறப்புடன் விளங்குவதாகவும், ஆனுல் கிழக்கு, மேற்கு ஜெர்மனிகள் ஒன்றுபட்டுவிட்டால் மூன்ருவது உலகயுத்தம் ஏற்படக்கூடுமென்று சொன்னதும் ஒன்றும் புரியவில்லை.

உடன் சுவாமி சிரித்துக்கொண்டே, ஒரு ஜெர்மனியன் தனித்திருப்பின் திறமையாக உழைப்பானென்றும், இரு ஜெர்மனியர் சேர்ந்துவிட்டால் ஒரு சங்கம் அமைத்துவிடுவரென்றும், மூன்று ஜெர்மனியர் சேர்ந்தால், உலகத்தை வெல்லப் புறப்பட்டுவிடுவரென்றும் சொன்ஞர்! முதல் உலக யுத்தத்திலே ஜெர்மனி தோற்கவில்லை என்றும் யுத்தம் ஒத்திப்போடப்பட்டதாகவுமே அங்கு மக்கள் நினைத்தனராம். பின்னர் ஹிட்லர் வந்ததும், தக்க ஏற்பாடுகளைச் செய்து, ஒத்திபோடப்பட்ட யுத்தம் மீண்டும் தொடங்கியது. இரண்டாவது உலகயுத்தத்திலும் தாங்கள் தோல்வி அடையவில்லை என்பதே அம்மக்களின் நம்பிக்கையாம். யுத்தத்தில் பெரும் நாசங்கள் ஏற்பட்டும், தங்கள் நாடு பிளவுபடுத்தப்பட்டும் ஜெர்மனி இன்று உலகத்திலே கைத்தொழிலில் முதன்மைபெற்று செல்வச்சிறப்புடன் விளங்குவது அம்மக்களின் திறமையையும், மேன்மையையும் காட்டுகின்றது.

மீண்டும் யுத்தத்தில் இறங்காமல், அவர்களது திறமைகள் உலகிலே ஆக்க வேலைக்குப் பயன்பட்டால், பின்தங்கிய பலநாட்டு மக்களுக்கு எவ்வளவோ முன்னேற்றமல்லவா?

ஜெர்மன் பிரிவினை கெடுதலென்றும், அது மீண்டும் ஒன்றுபடவேண்டும் என்றே நினைத்தேன். ஆனுல் ஒன்றுபடுவதால் மூன்ருவது உலகயுத்தம் ஏற்படுவதாயின், இந்தப் பிரிவினையும் ஒருவிதத்தில் நல்லதென்றே தோன்றுகின்றது.

ஃ ஃ ஃ

காமனையன்று கண்ணுற் கனலெரியாக நோக்கித், தூமமும் தீபங்காட்டித் தொழுமவர்க் கருள்கள் செய்து, சேம நெய்த்தானமென்னுஞ் செறி பொழிற் கோயில் மேய, வாமனை நினைந்த நெஞ்சம் வாழ்வுற நினைந்தவாறே.

—அப்பர்சுவாமிகள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜி. சி. ஈ. பரீட்சைகளின் கட்டணம் குறைக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

**ஜி. சி. ஈ. பரீட்சைகளுக்கான கட்டணங்களைக் குறைப்பதற்கான திட்டமொன்றை பரீட்சை இலாகா தயாரித்து வருகிறது. கல்வி மந்திரியின் உத்தரவின் பேரிலேயே இவ்வித திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.**

திட்டம் தயாரிக்கப்பட்டதும் அடுத்த வருடத்திலிருந்து இது அமுலுக்கு வருமென கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்திட்டம் அமுலுக்கு வந்ததும் ஜி. சி. ஈ. சாதாரணம், ஜி. சி. ஈ. உயர்தரம் ஆகிய இரு பரீட்சைகளுக்கும் பட்டணம் குறைக்கப்படும்.

# குமாரிசச்சு, ராணி பேட்டி

யாழ்ப்பாணம், புதன்

**"எங்கெங்கெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்களோ அங்கங்கெல்லாம் சென்று நடனமாடிப் பேரும் புகழும் பெறவேண்டுமென்பதே எனது இலட்சியம்"**

என்று யாழ்ப்பாணம் வந்துள்ள பிரபல தென்னிந்திய நாட்டிய நடிகை குமாரி சச்சு நேற்றிரவு நமதுநிருபருக்களித்த பேட்டியின் போது தெரிவித்தார்.

குமாரி சச்சு நமது நிருபர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மலர்ந்த முகத்துடன் பதில் சொன்னார்.

பானுமதி கதாநாயகியாக நடித்த 'ராணி' படத்தில் வளரும்பானுமதியாக சச்சு நடித்து முதல் முதலாகச் சினிமாவுலகில் புகுந்தார், பின்னர் தேவதாஸ் படத்தில் சிறுமியாக நடித்து, ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' மூலம் தமிழ் திரைப்படவுலகில் நிரந்தரமான இடமொன்றைப் பிடித்துக்கொண்டார்.

''படிக்கவேண்டும், பட்டம்பெறவேண்டுமென்றெல்லாம் எண்ணியிருந்த நான் எதிர்பாராதவிதமாகச் சினிமாவுலகில் புகுந்துவிட்டேன்'' என்று சொன்ன அவர், தமது பதினேழுவருட வாழ்க்கைபற்றி மனந் திறந்து கூறினார்.

ஐம்பது படங்களுக்குமேல் இதுவரை நடித்துள்ள சச்சு தற்போது சந்திரபாபு தயாரித்துக்கொண்டிருக்கும் படமொன்றின் கதாநாயகியாக நடிப்பதாகத் தெரிவித்தார்.

நகைச்சுவை நடிகர்களில் யாருடைய நடிப்பு தங்களுக்குப் பிடிக்கும் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், ''ஜெரிலூயீஸைத்தான் பிடிக்கும்'' என்றார்.

**பின்னணிப் பாடகி ராணி பேட்டி**

'எல்லாம் மாயைதானா?..' என்று 'தேவதாஸி'ல் ஒலித்த குரல் திரைப்பட பின்னணிப் பாடகி கே. ராணியைக் கண்டதும் எதிரொலித்தது. அவரது குரல்மட்டுமல்ல, அவரது சுபாபமும் இனிமையானதுதான். 'வாருங்கள்' என்று வரவேற்கையிலேயே அவரது கனிவுள்ளம் வெளிப்பட்டது.

''பன்னிரண்டு சிங்களப் படங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ், தெலுங்குப் படங்களிலும் பாடியிருக்கிறேன்'' என்று சொன்ன அவர் மிகவும் மனவருத்தத்துடன் தமிழ்ப் படங்களில் பாடுவதற்கான சந்தர்ப்பம் தற்போது கிடைக்கவில்லை என்று கவலை தெரிவித்தார்.

இலங்கை ரசிகர்களைப் பற்றி அவர் மிகவும் பாராட்டிப் பேசினார். ''வரவேற்பதிலும், இன்முகத்துடன் கதைப்பதிலும் கலையார்வத்திலும் கலையை ரசிப்பதிலும் இலங்கை மக்கள் சிறந்து விளங்குவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்று மகிழ்ச்சி பொங்க ராணி கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு இவர்களது கோஷ்டியில் குமாரி சச்சுவின் சகோதரி மாடிலட்சுமி, நடன வித்தகர் வழுவூர் ராமையாபிள்ளை ஆகியோரும் சச்சுவின் சகோதரரும் அவரது தாயாரும் வந்துள்ளனர்.

## நிதிமந்திரியின் முடிவுக்கு ஆட்சேபம்

கொழும்பு, செவ்வாய்

சிங்களத்தில் தேர்ச்சி பெருத அரசாங்க சேவை ஊழியர்களும் குமாஸ்தாக்கள் சேவை இரண்டாம் பிரிவு (கிளாஸ் II) பரீட்சைக்குத் தோற்றலாம் என்ற நிதிமந்திரியின் முடிவுக்கு ராஜ்ய பாஷா அராக்ஷகவர்த்திய சமிதி பெரமுனே ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சை அடுத்த மாதம் 6-ந் திகதி நடைபெறவிருக்கிறது சிங்களத்தில் தேர்ச்சி பெருதவர்கள் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்களென மேற்படி பெரமுனே புகார் தெரிவித்துள்ளது.

## சீன ஆயுதங்கள்

ஜாகர்த்தா, அக். 13

ஜாகர்த்தாவிலிருந்து சுமார் 40 மைல் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் கம்யூனிஸ்டுகளின் ''ஆதிக்கத்திலிருந்த'' ஒரு இராணுவ ஆயுத கிடங்கில், சீனவில் தயாரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அனேக இயந்திரத் துப்பாக்கிகளும் இவற்றுள் இருந்தன. சீனவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே இப்படியான ஒப்பந்தம் இல்லாதபோது இவ்வளவு ஆயுதங்கள் இருந்தது குறித்து உயர் அதிகாரி ஆச்சரியம் அடைந்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் பஸ்தரிப்பு நிலையம்

பம்பலப்பிட்டி, புதன்

மாகாணங்களில் நவீன முறையில் பிரயாணிகள் தங்குவதற்காக வசதிகளுடன் எட்டு மத்திய பஸ் தரிப்பு நிலையங்களை இ.போ.ச. நிறுவுவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்திலும் ஒரு நிலையம் நிறுவப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

**சிறுபான்மை சமூகத்தாருக்கு**

# செனட்டர் பதவி வழங்குமாறு பிரதமரை வற்புறுத்தியுள்ளோம்

## வவனியா எம். பி. பேச்சு

வவனியா, செவ்.

''சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு செனட்டர் பதவி வழங்க வேண்டுமென்று அ. இ. தமிழ் காங்கிரஸ் கட்சி பிரதம மந்திரியை வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறது. இதில் நாங்கள் வெற்றி காணும்வரை அரசாங்கத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி வருவோம்'' என்று மதியாமடு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினார்.

''ஒரு ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் [illegible] உரிமையுண்டு. ஜனநாயகத்தின் ஒரு சின்னமாகத் திகழும் பாராளுமன்றத்துக்கு வாக்குரிமைபெற்ற எல்லாச் சமூகத்தினருமே ஒன்று சேர்ந்து அங்கத்தவர்களை அனுப்பி வைக்கின்றனர். ஆனால், ஒரு சமூகத்தினரைப் புறக்கணித்து மட்டும் பதவியில் இருக்கமுடியாது'' என்றும் திரு. ரி. சிவசிதம்பரம் கூறினார்.

''இலங்கையில் வாழும் எல்லோருடைய நலன்களைப் பாதுகாக்கவும் ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி பார்லிமெண்டுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். செனட் சபையைப்பொறுத்தமட்டில் எம்மிடையேயுள்ள சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அங்கத்துவம் வழங்கவேண்டும். இது குறித்து கடைசிவரை நாங்கள் முழு முயற்சியெடுப்போம்'' என்றும் அவர் கூறினார்.

**களுத்துறை**

## தேர்தல் வழக்கு தள்ளுபடி

காலி, செவ்வாய்

களுத்துறைத் தொகுதிப் பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு சம்ளி குணவர்த்தன தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று நீதிபதி ஏ. ஈ. புல்ட்ஜன்ஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கு செலவுப் பணத்துடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

மகாவஸ்த்துவாதைச் சேர்ந்த ரண்முனு ரொம்சன் சில்வா, களுத்துறையிலுள்ள கட்டுக்குருண்டையைச் சேர்ந்த குணரத்ன வில்சன் சொய்ஸா ஆகிய இருவரும் வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

## விசாரணை நடத்த மந்திரி உத்தரவு

பம்பலப்பிட்டி, புதன்

கிரிதரஆலை சம்பந்தமான குறிப்புக்கள் அடங்கிய பத்திரங்கள் மாயமாக மறைந்ததைத் தொடர்ந்து தொழில் மந்திரி திரு. எம். ஏச். முகமது இதுபற்றி ஒரு விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக விசாரணை நடத்தும் உதவித் தொழில் அதிகாரி திரு. டபிள்யு. எல். சி. பெரரா நேற்று பல குமாஸ்தாக்களையும் சில்லறை ஊழியர்களையும் விசாரணை செய்தார். தேவை ஏற்படின் இது குறித்து விசாரணை செய்ய இரகசியப் பொலிசாரும் அழைக்கப்படுவரெனத் தெரியவருகிறது.

## தமிழில் மட்டும் பரீட்சையாம்!

பம்பலப்பிட்டி, புதன்

''ஐ. தே. க.— தமிழரசு அரசாங்கம், அரசாங்க தட்டெழுத்தாளர் பரீட்சையை தமிழில் மட்டுமே நடத்த தீர்மானித்துள்ளது. இதுவரை அரசாங்க இலாகாக்களில் சிங்களத் ல் செய்யப்பட்டுவந்த வேலைகள் எல்லாம் ஆங்கிலத்திலும், தமிழிலும் செய்யப்படுவதாலேயே தமிழ் தட்டெழுத்தாளர்களை வேலைக்கமர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது'' என்று 'ஜனதின' பத்திரிகை இம்மாதம் 7-ந் திகதி முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

உத்தேச மாவட்டசபைகள் நிறுவப்பட்டு செயல்படுமானல் மிகக் குறுகிய காலத்தில் வடகிழ்மாகாணங்களில் சமஷ்டி அரசமைப்பு ஏற்படும் என மலைநாட்டு கிராமசபைத் தலைவர்கள் காங்கிரஸ் தெரிவித்துள்ளதாகவும் இன்னொரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## பஸ் இருந்தும் சேவையில்லை

யாழ்ப்பாணம், வியா,

பருத்தித்துறை இ. போ. ச. பஸ் டிப்போவின் கண்காணிப்பின் கீழ் சேவையிலீடுபடும் பருத்தித்துறை நெல்லியடி யாழ்ப்பாணம் கடுகதி பஸ் சேவை, சாதாரண சேவை கடந்த சில நாட்களாக ஒழுங்காக நேரத்திற்கு சேவையில் ஈடுபடவில்லை எனத் தெரியவருகிறது.

இதன் காரணமாக பொதுமக்கள் குறிப்பாக வேலைஸ்தலங்களுக்கு செல்பவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. பஸ் சாரதிகள் கொண்டக்டர்கள் ஒழுங்காக வேலைக்கு வராததே முக்கிய காரணமென்றும்; வராத தொழிலாளர்களை வேலைக்கு அழைத்து வரும்படி, வேலைக்கு வந்தவர்களை அனுப்பியதன் காரணமாகவே மேலும் நிலைமை மோசமாகி விட்டதென்றும் தெரியவருகிறது.

போதிய பஸ்கள் சேவைக்கு இருந்தும் சேவையிலீடுபடுத்த ஆட்களில்லாததாலேயே இவ்வித நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

**வார இறுதியில்**

## திருக்கேதீச்சரத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் அவசர வேண்டுகோளுக்கிணங்க ஒரு சிரமதானப் பணியை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இந்த அவசர சிரமதானப் பணிக்கு புண்ணிய தீர்த்தமான பாலாவிகிட்டத்தட்ட முற்றுகவற்றிவிட்டதே காரணமாகும். பாலாவியிலுள்ள மீன்கள் இறந்து பாலாவி முழுவதும் அவற்றின் முட்களால் நிறைந்திருப்பதை அடுத்த மழைக்குமுன் அகற்றுவதற்காகவும் அப்படி செய்யாவிட்டால் அடியார்கள் அங்கு சுமுகமாகத் தீர்த்தமாடமுடியாத நிலை ஏற்படும் என்ற காரணங்களுக்காகவுமே இப்பணி தற்பொழுது மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

## ஆசிரியர்கள் ஆட்சேபம்

வெள்ளவத்தை, புதன்

இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆசிரியர்கள் பல்கலைக்ழெகக்கல்விபெறுவதற்கான லீவு இன்னும் வழங்கப்படாததையிட்டு பல்கலைக்கழகப் பதிவாளரிடமும், கல்வி அமைச்சரிடமும் தமது அட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள விரிவுரைகளுக்குப் போகமுடியாத பெருஞ்சங்கட நிலையை இவர்கள் அடைந்துள்ளனர்.

## இடமாற்றம்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு மண்முனை வடக்கு காரியாதிகாரியாகக் கடமையாற்றிய ஜனுப் யூசுப் மினுவாங்கொடைக்கு மாற்றலாகிச்சென்றுள்ளதைத் தொடர்ந்து அவரின் வேலையை வவுணதீவு காரியாதிகாரி திரு. முருகவேள் தற்பொழுது கவனித்துவருகின்றார்.


## ஹாட்லிக்கல்லூரி

### பிரவேசம் : 1966

1. மத்திய பாடசாலை. சாதாரண க. பொ. த. ப; உயர்தர க. பொ. த. ப. கலை விஞ்ஞான ஆரம்ப வகுப்புகளில் இடமுண்டு. கல்லூரி அலுவலகத்தில் பெறக்கூடிய பத்திரங்களில் விண்ணப்பஞ் செய்வோர் ஒவ்வொரு வகுப்பிற்கும் எதிரே தரப்பட்டிருக்கும் திகதிகளுக்குப் பின் பிறந்தவராய் இருத்தல்வேண்டும்
2. வகுப்பு 6 (70 இடங்கள்— 30-6-54) விண்ணப்பங்களின் முடிவுத்திகதி 20-10-65. பிரவேசப் பரீட்சைத் திகதி 6-11-65.
3. வகுப்பு 7: (31-12-53)
4. வகுப்பு 8: (31-12-52)
5. சாதாரண க. பொ.- த. ப. ஆரம்ப வகுப்பு: (31-12-51). இவ் வகுப்புக்களில் மிகச் சில இடங்களே உண்டு. விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 20-10-65. பரீட்சைத்திகதி 6-11-65.
6. உயர்தர க. பொ. த. ப. ஆரம்ப வகுப்பு (31-12-47) விஞ்ஞான வகுப்புக்களில் ஆங்கில மூலத்திற்கே இடமுண்டு. விண்ணப்பங்களின் முடிவுத் திகதி 27-10-65. பரீட்சைத் திகதி 13-11-65.

க. பூரணம்பிள்ளை
அதிபர்.

பருத்தித்துறை.
28-8-1965. 890



## யாழ். இந்து மகளிர் கல்லூரி

### பிரவேசப் பரீட்சை 1966

4-ம், 6-ம், 7-ம், 8-ம் க. பொ. த. ப. வ. (சா) ஆரம்பம் கலை & விஞ்ஞானம் க. பொ. த. ப. வ. (உ) ஆரம்பம் கலை & விஞ்ஞானம் வகுப்புகளில் இடமுண்டு.

விண்ணப்பப் பத்திரங்கள் பாடசாலைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6-ம் வகுப்பு:- விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 20-10-65.

6-ம் வகுப்பு:- பரீட்சைத் திகதி 6-11-65.

7-ம், 8-ம் க. பொ. த. ப. வ. சா & உயர்தர வகுப்புகளுக்கு:-

விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 30-10-65.

7-ம், 8-ம் க. பொ. த. ப. வ. சா. வகுப்புகளுக்கு:

பரீட்சைத்திகதி13-11-65

Mrs. V. Arumugam.
principal.
Jaffna Hindu Ladie's College
11-10-65. 120g


**இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org